பக்கங்கள்:12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆவணி 03 | திங்கட்கிழமை | 19.08.2024 | கதிர் 285

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிப்பேன்


## சஜித் நேற்று உறுதியளிப்பு





நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையைநான்ஜனாதிபதியாகிய

☞ 2



## இது ரகசியம் அல்ல!

நடக்க இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சி இன்னமும் எந்த முடிவையும் எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு தமிழ் பொது வேட்பாளராகத் தன்னை முன்னிலைப்படுத்திய அரியநேந்திரனைப் பின்பற்ற முயற்சிக்கும் தனது கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்களுக்கு தமிழ் அரசுக் கட்சி ஒரு 'செக்' வைத்திருக்கின்றது.

யாராவது அப்படி அரியநேந்திரனது மேடையில் ஏறிப் பேசுவீர்களானால் கவனம் என்று எச்சரிக்கப்பட்டிருக்கின்றார்கள். பொது வேட்பாளரின் முதலாவது பரப்புரைக்கூட்டம் முல்லைத்தீவில் நேற்று இடம்பெற்றது. இதனை வடக்குமாகாணசபையின்முன்னாள் விவசாய அமைச்சரான சிவநேசன் தலைமையில் நடந்திருந்தது. இந்த நிலையிலேயே கட்சி இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கின்றது.

கட்சிஇதுவரைஎந்தமுடிவையும் எடுக்கவில்லை என்பதைக் காரணமாகக்காட்டி,'அரகலய'போராட்டக் குழுவின் மக்கள் போராட்ட முன்னணியின் வேட்பாளரை ஆதரித்து அவரது மேடைகளில் நான் ஏறிப் பேசினால்

☞ 2

## பேராயரைச் சந்தித்தார் எதிர்க் கட்சித் தலைவர்

2019உயிர்த்தஞாயிறுதாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையை வெளிக்கொண்டுவருவதற்கான தனது அர்ப்பணிப்பை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கொழும்பில் பேராயர் கர்தினால்மல்க்கம்ரஞ்சித்தைச்சந்தித்துப் பேசும்போது உறுதிப்படுத்தினார்.

கொழும்பில் உள்ள பேராயர் மாளிகையில் கர்தினால் மல்கம் ரஞ்சித் மற்றும் பிற கத்தோலிக்க திருச்சபை தலைவர்களுடனானசந்திப்பின்பின்னர் பேசிய பிரேமதாச, வெளிப்படையான விசாரணையின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

நீதி வழங்கப்படுவதை உறுதி செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும், பொறுப்பானவர்கள்பொறுப்புக் கூறப்படுவார்கள் என்றும் அவர் உறுதியளித்தார்.

### தேர்தல் பரப்புரைக் காலத்தில்

## சமூக ஊடகங்கள் மீதும் இம்முறை கண்காணிப்பு

தேர்தல் வாக்களிப்பு தினத்திற்கு முந்தைய தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'பவ்ரல்' தெரிவித்துள்ளது. சமூ-க ஊடகங்களும்இம்முறை கண்காணிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்தில்தேர்தல்கண்காணிப்பாளர் களுக்கு பயிற்சிகளைவழங்கும்நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளதாகஅதன்நிறைவேற்று பணிப்பாளர்தெரிவித்தார்.

சமூக ஊடகங்களை கண்காணிக்கவுள்ளதாக தெரிவித்துள்ள அவர் எதிர்வரும்திங்கட்கிழமை முதல் சமூக ஊடக

☞ 2

## ஜப்பான் முதல் இந்தியாவரையும் பொருளாதாரத்தில் ஒத்துழைப்பு

### அதுவே திட்டம் என்கிறார் ரணில்

வங்காள விரிகுடா மற்றும் அதை சூழவுள்ள பிராந்தியங்கள் தற்போது அபிவிருத்தி மையமாக மாறிவருவதால்,பிம்ஸ்டெக் (BIMSTEC) அமைப்பின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே பிம்ஸ்டெக் அமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கையானது இந்தியாவுடன்நெருக்கமானபொருளாதார ஒருங்கிணைப்புடனும் ஜப்பான்முதல்இந்தியாவரை பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கைகளை ஏற்படுத்தவும்எதிர்பார்ப்பதாக ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க தெரிவித்தார்.

'உலகின் தெற்கு நாடுகளின் குரல்' மாநாட்டின் அரச தலைவர்கள் அமர்வில் சனிக்கிழமை ஆற்றிய உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அனுராதபுரம் ஜனாதிபதி மாளிகையில் இருந்து நிகழ்நிலை (ஒன்லைன்) மூலம் அவர் உரையாற்றினார்.

'நிலைபேறானஎதிர்காலத்திற்கான வலுவூட்டப்பட்ட உலகின்தெற்குநாடுகள்'

☞ 8

## அர்ஜுன மகேந்திரனை மீண்டும் நாட்டுக்குக் கொண்டுவருவோம்

### தேசிய மக்கள் சக்தி தலைவர் அனுர உறுதி

சிங்கப்பூருக்குத் தப்பிச் சென்ற மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்அர்ஜுனமகேந்திரனை மீண்டும் இலங்கைக்குக்கொண்டுவருவதற்கு தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் முன்னுரிமை வழங்கப்படும்எனதேசியமக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமாரதிஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கிரிபத்கொடவில் நடைபெற்றபேரணியில் பேசிய அவர், நாட்டின் வருவாயை உயர்த்தும் திட்டங்களுடன் தேசிய மக்கள் சக்தி ஆட்சியை கைப்பற்றும் என்றும் தமது ஆட்சி மோசடி மற்றும் ஊழலை நிறுத்தும் என்றும் கூறினார்.

ரூ. 1,100 பில்லியன் வரிகள் பல்வேறு நபர்களால் செலுத்தப்படவில்லை. அதில் குறைந்தபட்சம் ரூ.169 பில்லியனை எந்தப் பிரச்சினையும் இன்றி மீட்டெடுக்க முடியும். மீதமுள்ளவை

☞ 8

## வாக்குகளுக்காகவே 13 குறித்து அனைவரும் பேசுகின்றார்கள்

### சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

வாக்குகளை பெறுவதற் காகவே அனைவரும் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் என்பதை உச்சரிக்கின்றனர்எனஜனாதிபதி தேர்தல் வேட்பாளரும் முன்னாள் இராணுவ தளபதியுமானசரத்பொன் சேகா தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதாக அரசியல் தலைவர்கள் குறிப்பிடுவது குறித்து அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

☞ 8

### தந்தை செல்வாவை, கடவுளர்களை வணங்கி

## முள்ளிவாய்க்காலில் அஞ்சலி செலுத்தி பின் பரப்புரையை தொடங்கிய அரியநேந்திரன்





ஜனாதிபதித் தேர்தலில்தமிழ்பொதுவேட்பாளராக நிறுத்தப்பட்ட அரியநேந்திரன்யாழ்ப்பாணத்தில்இந்து,கிறிஸ்தவ மதத் தலைவர்களைச் சந்தித்து ஆசி பெற்று, நல்லூர் கந்தசுவாமி கோயிலில் வழிபட்டு, தந்தை செல்வாவின் நினைவுத் தூபியில் மலரஞ்சலி செலுத்தி, முள்ளிவாய்க்கால்நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்தியபின்னர்தனது முதலாவது பரப்புரைக் கூட்டத்தை நேற்று மாலை முல்லைத்தீவில் தொடங்கினார்.

நேற்றுக் காலை தந்தைசெல்வாநினைவுச் சதுக்கத்துக்கு சென்ற பொதுவேட்பாளர்மற்றும் பொதுக் கட்டமைப்புக் குழுவினர்தந்தை செல்வாவின்

☞ 8

## சுயநலத்தோடு பிரிந்தவர்களுக்கு மக்கள் தகுந்த பாடத்தை புகட்டுவர்

### நாமலின் கற்பனை இது

சுய நல தேவைகளுக்காக எம்மை விட்டு விலகிச்சென்றவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

திஸ்ஸமஹாராம மகா விகாரையில் நேற்று வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத்

☞ 2

### பொது வேட்பாளர் விவகாரத்தில்

## தமிழ் அரசு உறுப்பினர்களுக்கு அதன் மத்திய குழு எச்சரிக்கை

தமிழ் அரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிப்பதாக இதுவரை யில் முடிவு எடுக்கப்படாத நிலையில், தமிழ்பொதுவேட்பாளரை கட்சி உறுப்பினர்கள் எவராவது ஆதரித்துச் பேசுவார்களாயின் அவர்கள் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்சியின் மத்திய குழு இதனைத் தனது உறுப்பினர்களுக்கான அறிவுறுத்தலாகக் குறிப்பிட்டுள்ளது.

வவுனியாவில்உள்ள விருந்தினர்விடுதிஒன்றில் நேற்று இடம்பெற்ற

☞ 2

## இனி இது .....

ஏற்றுக்கொள்வீர்களா? அதிகார அலகுகளை ஏற்படுத்தி அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு, அதாவது சமஷ்டிக்கு அவர் இணங்கியிருக்கிறார், எமதுகட்சியும் சமஷ்டித் தீர்வையே கேட்கிறது, எனவே நான் அந்த வேட்பாளரை ஆதரித்து அவர்களின் மேடைகளில் ஏறிப் பேச கட்சி அனுமதிக்குமா என்று சுமந்திரன் கேள்வி எழுப்பினார். அது நியாயமான கேள்வி என்பதை ஏற்றுக்கொண்ட கட்சியின் மத்திய குழு இப்படி கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொரு வேட்பாளரின் மேடையிலும் ஏறுவதை ஏற்கமுடியாது என்கிற முடிவுக்கு வந்தது.

அதே நேரம் தேர்தலில் எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிப்பதாக அறிவிக்காமல் அப்படியே இருந்துவிட்டால் என்ன என்கிற கேள்வி தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு இருந்தது. தற்போது இருக்கும் வேட்பாளர்களில் எவரும் தீர்வைத் தருவார்கள் என்கிற நம்பிக்கை ஏற்படாதபட்சத்தில் கட்சி அது தொடர்பில் எதுவும் பேசாமல் இருந்துவிடலாமே என்பது அவரது கருத்தாக இருந்தது. ஆனால், தமிழர்களின் முதன்மையான, பெரிய கட்சி என்கிற வகையில் மக்களை வழிப்படுத்த வேண்டிய கடமை கட்சிக்கு இருக்கின்றது, எனவே மக்கள் என்ன செய்யவேண்டும் என்பதை அவர்களுக்கு அறிவுறுத்துவது கட்சியின் தலையாய கடமை என்றுகூறி மாவையின் கருத்தை மத்திய குழு நிராகரித்துவிட்டது. அதன் பின்னரே மக்களுக்கான வழிகாட்டல் ஆவணத்தைத் தயாரிப்பதற்கான ஒ-ரு குழுவை மத்திய குழு நியமித்தது.

................

தமிழ் பொது வேட்பாளர் தரப்புகள் ஒருவழியாக நேற்று தமது பரப்புரையைத் தொடக்கின. ஜனாதிபதித் தேர்தலில் நிற்கும் வேட்பாளர்கள் எவரும் தீர்வைத் தரமாட்டார்கள், தமிழ் மக்களை ஏமாற்றுகிறார்கள் என்று தெரிவித்தே தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதாகப் பொதுகட்டமைப்பினர் அறிவித்தனர். ஆனால், அதே வேட்பாளர்களுடன் தமது தரப்பில் சரிபாதியினரான அரசியல் கட்சியினர் அரசியல் தீர்வு குறித்த பேச்சுக்களை நடத்த அனுமதிப்பர் என்கிற அவர்களின் இரட்டை வேடத்தை நேற்றைய கூட்டம் காட்டிக்கொடுத்தது. அதாவது இந்தக் கூட்டத்தில் ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவற்றின் தலைவர்களும் கலந்துகொண்டனர். ஆகமொத்தத்தில் ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால் என்று அரசியல் கட்சிகள் நாடகமாட, தெற்குச் சிங்கள வேட்பாளர்கள் தீர்வைத் தரமாட்டார்கள் என்று கூறி அதற்கெதிராக தமிழர்களை ஒன்று திரட்டுவது என்கிற தமிழ் மக்கள் பொதுச் சபையினரின் நோக்கத்திற்கு உற்சாகம் தரும் விதத்தில் நேற்றைய கூட்டம் களைகட்டியிருக்கவில்லை.

தமது எண்ணக்கருவின் வெளிப்பாட்டு மக்கள் மத்தியில் எத்தகைய வரவேற்பைப் பெற்றிருக்கின்றது என்பதை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்திருக்கவேண்டிய இந்த முதலாவது கூட்டம் மிகச் சொற்ப எண்ணிக்கையிலானவர்களுடன்தான் இடம்பெற்றது. அதிலும் குறிப்பாக பெண்கள்தான் அதிகளவில் அழைத்து வரப்பட்டிருந்தனர். உண்மை என்னவென்றால் இந்தக் கூட்டத்திற்கு பெரும் எண்ணிக்கையிலானவர்கள் வருவார்கள் என்கிற எண்ணம் ஏற்பாட்டாளர்களுக்கே இருக்கவில்லை என்பதுதான். அதற்கேற்பத்தான் அவர்கள் கொட்டகை வசதிகளையும் செய்திருந்தார்கள். பொதுக் கட்டமைப்பு என்று பெயர் இருந்தாலும் அவர்களின் அடிப்படைக் கட்டமைப்பு மிகப் பலவீனமானது என்பது இதிலிருந்தே தெரிகிறது. அவர்கள் கூறிய 100க்கும் மேற்பட்ட அமைப்புக்களில் இருந்து தலா 5 பேர் வீதம் வந்திருந்தால்கூட இந்த முதலாவது பரப்புரைக் கூட்டத்தில் ஆயிரம் பேரையாவது திரட்டியிருக்க முடியும். ஆனால் எல்லாம் பெயரளவில்தான் என்பதால், சேர்ந்திருப்பவர்கள் வெறும் உதிரிகள் என்பதாலும் திரட்சியைச் சாத்தியப்படுத்த முடியவில்லை. இனியாவது கொஞ்சம் அக்கறை எடுத்துச் செயற்பட்டால் நல்லது. முதலில் கிராம மட்டம் வரைக்கும் செல்லக்கூடிய அடிப்படைக் கட்டமைப்புக்களையாவது ஏற்படுத்த பொதுக் கட்டமைப்பினர் முயற்சிக்கவேண்டும். இல்லையேல் "நந்தவனத்தில் ஓர் ஆண்டி...." பாடல் மாதிரியாகிவிடும் நிலமை.

முல்லைத்தீவில் நேற்று நடந்த கூட்டத்தைப் போல ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் இரு கூட்டங்களை நடத்துவது என்றும் கடைசியில் வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களிலும் தலா ஒரு பொதுக் கூட்டத்தை நடத்துவது என்றும் தீர்மானித்திருக்கிறார்களாம். அதாவது மொத்தம் 24 பரப்புரைக் கூட்டங்களில் தமிழர்களின் 50 சதவீதத்தினருக்கும் அதிகமானவர்களின் ஆதரவைத் திரட்ட முடியும் என்று எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் கனவு நனவாகுமா என்பதும் இந்தக் கட்டமைப்பின் செயல்திறன் என்ன என்பதும் அடுத்த ஒன்றரை மாதத்தில் தெரிந்துவிடும். பொறுத்திருந்து பார்க்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நிறைவேற்று ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தும் ஒழிப்பேன் என்று உறுதியளித்திருக் ணுகிறார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச. வரும் ஜனாதிபதித் தேர்த லில் வேட்பாளராகப் போட்டியிடும் அவர் நேற்று ருவன்வெலவில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் இதனைத் தெரிவித்தார்.

''கடந்த காலங்களில் பல முன்னாள் தலைவர்கள் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை நீக்கம் குறித்த வாக்குறுதியை வழங்கினார்கள், ஆனால் அவர்கள் அதனைச் செய்யவில்லை, நான் நாடாளுமன்றத்தை அடிப்படையாக கொண்ட அமைப்புமுறையொன்றை அறிமுகப்படுத்துவேன்'' என்றார் அவர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி முறைமையை மாற்றுவதாக கடந்தகால தலைவர்கள் வாக்குறுதிகளை வழங்கினர். ஆனால் அவர்கள் பதவியேற்றவுடன் அதனை நிறைவேற்றத் தவறினர். எனக்கு அதிகாரம் அல்லது பதவி ஆசை இல்லை. அதனால் ஆட்சிக்கு வந்ததும் நாடாளுமன்றத்தை மையமாக வைத்து நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பலப்படுத்துவேன்.

தற்போதைய ஜனாதிபதி ராஜபக்ச குடும்பத்தை பாதுகாத்து வருகிறார், நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு சென்று அழித்தவர்கள் ராஜபக்ச குடும்பத்தினர்தான். அப்படியிருந்தும் தற்போதைய ஜனாதிபதி ராஜபக்சக்களின் பாதுகாவலராக மாறி அவர்களின் பொலிஸ்மா அதிபராக செயற்படுகிறார்.

சவால்களை புறக்கணிக்கும் மற்றவர்களைப் போலில்லை நான், அதனை எப்போதும் நேருக்கு நேர் எதிர்கொண்டிருக்கின்றேன். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், ஊழலற்ற அரசியல் ஒப்பந்தங்களுக்கு எதிராக நிற்கும் புதிய சகாப்தத்தை உருவாக்குவேன். திருடர்களுடனோ அல்லது ஊழல்வாதிகளுடனோ எனக்குள் எந்தக் கூட்டணியும் இல்லை.

ஊழல்வாதிகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ள மறுத்ததன் காரணமாகவே நான் எந்தப் பதவியையும் ஏற்கவில்லை. நான் மக்களின் வாக்கு மூலம் அதிகாரத்திற்கு வந்து நாட்டின் தற்காலிக பாதுகாவலராக பணியாற்றவே விரும்புகின்றேன், தேசத்திற்கு அநீதி இழைத்தவர்களுக்கு நீதி வழங்குவதில் கவனம் செலுத்துகின்றேன்.

தற்போதைய சகாப்தம் பழிவாங்கல், வெறுப்பு மற்றும் அதிகார துஸ்பிரயோகம் ஆகியவற்றால் நிரப்பப்பட்டிருக்கின்றது. அதிகரித்து வரும் சமத்துவமின்மையையும், அதிகரித்து வரும் வறுமையையும் தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மக்கள்தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் இப்போது தீர்வுகள் ஏதுமின்றி வறிய நிலையில் உள்ளனர்.

ஐக்கிய மக்கள் கூட்டணி பொருளாதார மறுமலர்ச்சியைக் கொண்டுவரும். ஊழல் மற்றும் நேர்மையற்ற சகாப்தத்தை உருவாக்கும். தற்போதைய நிர்வாகம் பொருளாதாரத்தை மிக மோசமாகக் கையாள்கின்றது. மக்கள் விலைவாசி அதிகரிப்பு மற்றும் கஷ்டங்களினால் அவதியுறுகின்றனர் என்பதே யதார்த்தம்.

சாதாரண குடிமக்கள் வறுமையில் ஆழ்ந்திருக்கும் நிலையில், ஜனாதிபதி ஆடம்பரப் பயணங்களுக்கு ஆடம்பரமாகச் செலவு செய்கிறார். தனது நெருங்கிய கூட்டாளிகளுக்கு ஒப்பந்தங்களை வழங்குகிறார். இந்த துயரத்தில் இருந்து மக்களை விடுவிக்கும் சகாப்தம் செப்டம்பர் 21 தொடங்கும் - என்றார்.

## சமூக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணிப்பு அறிக்கைகளை தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

மத்திய குழுவின் நேற்றைய கூட்டம் குறித்து அவர் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலின் பிரதான வேட்பாளர்களுடன் பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எமது அடிப்படை நிலைப்பாடு வடக்கு - கிழக்கு இணைந்த சமஸ்டி அடிப்படையிலான தீர்வு ஆகும். மூன்று பிரதான வேட்பாளர்களுடனும் இடம்பெற்ற இதுவரை நடந்த பேச்சு தொடர்பாக கூட்டத்தில் தெரியப்படுத்தினோம். சில முன்னேற்றகரமான கருத்துக்களை அவர்கள் தெரிவித்துள்ளார்கள். எனினும் அவர்களது தேர்தல் அறிக்கை வெளிவந்த பின்னரே எமது இறுதி முடிவு எடுக்கப்படும்.

நாமல் ராஜபக்ஸ என்னுடைய வீட்டிற்கு வந்து சந்தித்து இருந்தார். அவர்களிடம் உள்ள விடயங்களை தெரியப்படுத்தினார். அது அதி தீவிர சிங்கள வாக்குகளைப் பெற்றுக்கொள்வதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

அதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் கலந்துரையாடியிருந்தோம். தற்போது தெற்கில் சிங்கள பௌத்த பேரினவாதம் தலைத் தூக்காமல் உள்ளது. அது தொடர்பில் கலந்துரையாடினோம்.

எமது மக்களை வழிகாட்டுவதற்காக நாங்கள் ஆவணம் ஒன்றைத் தயாரிக்கவுள்ளோம். அதற்கான சிறு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. 5 பேர் அந்தக் குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் பொது வேட்பாளராக வர்ணிக்கப்பட்டுள்ள அரியநேந்திரன் சம்மந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது. சென்ற கூட்ட தீர்மானத்தின் படி விளக்கம் கோரி இரண்டு வார கால அவகாசம் கொடுத்து அவருக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதற்குரிய பதில் கிடைத்த பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவெடுப்போம். அதுவரைக்கும் எமது கட்சியின் எந்தக் கூட்டத்திலும் அவர் கலந்துகொள்ளமாட்டார்.

அந்தப் பின்னணியில் எதிர்வரும் நாட்களில் இடம்பெறும் பரப்புரைக் கூட்டங்கள் தொடர்பில் கேள்விகள் எழுந்துள்ளது. கட்சி இது சம்மந்தமாக எமது ஆதரவாளர்களுக்குக் கொடுக்கும் அறிவுரை என்ன வென்றால் ஒருவரிடம் விளக்கம் கோரி கடிதம் அனுப்பியுள்ளோம். இதனால் அவரது மேடைகளில் ஏறி ஆதரித்துப் பேசும்போது அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். எமது கட்சி இதுவரை எந்த வேட்பாளருக்கும் ஆதரவு வழங்குவதாகத் தீர்மானிக்கவில்லை என்றார்.

## சுயநலத்தோடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலுக்கு நாங்கள் தயாராகவே இருக்கிறோம். சர்வமத வழிபாடுகளுடன் எமது முதலாவது தேர்தல் பரப்புரைக்கூட்டத்தை புதன்கிழமை அநுராதபுரம் நகரில் நடத்துவோம். எமது வெற்றியில் நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் பங்காளிகளாவர்.

செப்டெம்பர் 21 தேர்தலுக்குப் பின்னர் தேசிய உற்பத்திகளை முன்னிலைப்படுத்திய பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்போம். தேசிய உற்பத்திகளுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுப்போம். தனிநபரின் முன்னேற்றத்துடன் மாத்திரமே பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தங்களின் சுயநல தேவைகளுக்காக எம்மை விட்டுச் சென்றவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள். நபர்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் செய்யவில்லை. கொள்கையை முன்னிலைப் படுத்தியே அரசியலில் ஈடுபட்டுள்ளோம்.

ஜனாதிபதி தேர்தலில் யார் யாருக்கு சவால் என்பது குறித்து கவனம் செலுத்துவதைவிட நாடு எதிர்கொண்டுள்ள சவால்கள் குறித்து அவதானம் செலுத்தவேண்டும். கொள்கை அடிப்படையில் எம்முடன் எவரும் கைகோர்க்கலாம் - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை இராஜதந்திரி ஹிமாலி அருணதிலகவுக்கு எதிரான ஆஸ்திரேலிய பெடரல் நீதிமன்றம்: தீர்ப்பு

## வெளிவிவகார அமைச்சு



இலங்கை இராஜதந்திரி ஹிமாலி அருணதிலக அவுஸ்திரேலியாவுக்கான பிரதி உயர்ஸ்தானிகராகப் பணியாற்றிய காலப்பகுதியில் அந்நாட்டு நியாய ஊழியச் சட்டத்தை மீறி செயற்பட்டிருக்கிறார் எனவும், அதற்காக அக்காலப்பகுதியில் அவரது வீட்டுப்பணிப் பெண்ணாகப் பணியாற்றிய பிரியங்கா தனரத்னவுக்கு அவர் 543,000 டொலர்களைச் செலுத்தவேண்டும் எனவும் ஆஸ்திரேலிய பெடரல் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றது.

இருப்பினும் இதுகுறித்து விளக்கமளித்திருக்கும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சு, அப்பணிப்பெண்ணுக்கு அமைச்சின் ஊடாக அனுமதியளிக்கப்பட்டு, இருதரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவு முழுமையாக செலுத்தப்பட்டிருப்பதாகவும், அவர் (பிரியங்கா) ஹிமாலி அருணதிலக நாடு திரும்புவதற்கு முன்பதாக உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து இரகசியமாக வெளியேறினார் எனவும் தெரிவித்திருக்கிறது.

தற்போது ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதியாகப் பதவி வகிக்கும் ஹிமாலி அருணதிலக, கடந்த 2015 - 2018 வரையான காலப்பகுதியில் அவுஸ்திரேலியாவுக்கான இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகராகப் பணியாற்றினார். அப்போது ஹிமாலி அருணதிலகவின் கன்பரா இல்லத்தில் வீட்டுப்பணிப்பெண்ணாக இலங்கையைச்சேர்ந்த பிரியங்கா தனரத்ன இணைந்துகொண்டார்.

அங்கு மூன்று வருடங்களாக வாரத்தில் ஏழு நாள்களும் பணியாற்றிய பிரியங்காவுக்கு, அம்மூன்று ஆண்டுகளில் இரு நாள்கள் மாத்திரமே ஓய்வு வழங்கப்பட்டிருக்கின்றது. அதுவும் உணவு சமைக்கும் போது அவரது கையில் தீக்காயம் ஏற்பட்டதன் காரணமாகவே அந்த ஓய்வு வழங்கப்பட்டதாக சிட்னியை தளமாகக்கொண்டு இயங்கிவரும் சட்டத்தரணி டேவிட் ஹிலார்ட் தெரிவித்திருக்கிறார்.

மேற்குறிப்பிட்டவாறு முழுமையாக மூன்று ஆண்டுகள் வீட்டுப்பணிப்பெண்ணாகப் பணியாற்றிய பிரியங்காவுக்கு அதற்காக மொத்தமாக 11,212 டொலர்கள் மாத்திரமேஊதியமாகவழங்கப்பட்டிருப்பதாகவும், இருப்பினும் பிரியங்கா அவுஸ்திரேலியாவில் பணியாற்றத் தொடங்கிய 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வாரமொன்றில் 36 மணிநேரப் பணிக்கான தேசிய மட்டத்திலான குறைந்தபட்ச ஊதியம் 656.90 டொலர்கள் எனவும் டேவிட் ஹிலார்ட் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அதுமாத்திரமன்றி அனுமதிக்கப்பட்டதை விட அதிக நேரம் பணிக்கு அமர்த்தியிருத்தல் மற்றும் நிர்ணயிக்கப்பட்டதை விடவும் குறைந்தளவு ஊதியமே வழங்கப்பட்டிருத்தல் ஆகியவற்றின் விளைவாக ஹிமாலி அருணதிலகவினால் ஆஸ்திரேலியாவின் ஊழியச்சட்டம் மீறப்பட்டிருப்பதாகவும், இது 'நவீன அடிமைத்துவத்துக்கு' சிறந்த உதாரணம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

இவ்வாறானதொரு பின்னணியில் அவுஸ்திரேலிய பெடரல் நீதிமன்றத்தில் நியாயமான ஊழியச்சட்டத்தின்கீழ் ஹிமாலி அருணதிலகவுக்கு எதிராக பிரியங்கா தனரத்னவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அவர் சார்பாக சட்டத்தரணி டேவிட் ஹிலார்ட் ஆஜராகியிருந்தார்.

இவ்வழக்கின் மீதான விசாரணைகளை அடுத்து, ஹிமாலி அருணதிலகவினால் நியாய ஊழியச்சட்டம் பல்வேறு வழிகளில் மீறப்பட்டிருப்பதாகவும், எனவே அவர் செலுத்தவேண்டியிருக்கும் 374,000 டொலர் நிலுவைச் சம்பளத்துடன், வட்டியாக 169,000 டொலரைச் சேர்த்து மொத்தமாக 543,000 டொலர்களை பிரியங்கா தனரத்னவுக்குச் செலுத்துமாறு ஆஸ்திரேலிய பெடரல் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

இருப்பினும் இவ்விவகாரம் தொடர்பில் தாம் அவதானம் செலுத்தியிருப்பதாகக் குறிப்பிட்டு வெளிவிவகார அமைச்சால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில், வெளிநாடுகளில் இராஜதந்திரப்பதவிகளுக்கு நியமிக்கப்படும் அதிகாரிகள் அவர்களது உதவிக்கென பணியாளர் ஒருவரை அழைத்துச்செல்வதற்கு அவசியமானவசதிகளைவெளிவிவகார அமைச்சு செய்துகொடுப்பது வழமையான விடயம் எனத் தெரிவித்துள்ளது.

அதேவேளை 'இவ்விவகாரத்துடன் தொடர்புடைய வீட்டுப்பணிப்பெண் அவரது 3 வருட பணிக்காலத்தை முழுமையான நிறைவுசெய்திருந்த நிலையில், தொழில் வழங்குனர் (ஹிமாலி அருணதிலக) ஆஸ்திரேலியாவிலிருந்து மீண்டும் இலங்கைக்குவருவதற்குத்திட்டமிட்டிருந்ததினத்துக்கு முதல் நாள் தொழில் வழங்குனரின் உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்துஇரகசியமாகவெளியேறிவிட்டார். இருப்பினும் வீட்டுப்பணிப்பெண்ணின் ஊதியமாக வெளிவிவகார அமைச்சினால் அனுமதியளிக்கப்பட்டிருந்த கொடுப்பனவு அவருக்கு முழுமையாக செலுத்தப்பட்டுவிட்டது' எனவும் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# ஜனாதிபதி வேட்பாளர் ரணிலுக்கு வழங்கிய சிலிண்டர் சின்னத்தை இரத்து செய்யுங்கள்

## மக்கள் போராட்ட சிவில் அமைப்பு முறைப்பாடு



ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ள சிலிண்டர் சின்னத்தை இரத்து செய்து அவருக்கு பிறிதொரு சின்னத்தை வழங்குங்கள்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்குஎமக்கவழங்கியுள்ள சிலிண்டர் சின்னத்தை எவ்வாறு சுயேச்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்க முடியும் என மக்கள் போராட்ட சிவில் அமைப்பின் பொதுச்செயலாளர் ஜனக பண்டார தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை முறைப்பாடளித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு அவர் குறிப்பிட்டதாவது -

2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு எமக்கு அரசியல் கட்சி ஒன்று இல்லாத காரணத்தால் சுயேச்சையாக போட்டியிடுவதற்கு தீர்மானித்து கட்டுப்பணம் செலுத்தினோம்.

இதற்கமைய களுத்துறை -மதுராவெல, களுத்துறை நகர சபை மற்றும் களுத்துறை பிரதேச சபை, பாணந்துறை ஆகிய பகுதிகளில் சுயாதீனமாக போட்டியிடுவதற்கு எமக்கு 'சமையல் எரிவாயு சிலிண்டர்' சின்னம் வழங்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த நிலையில் அரசாங்கத்தின் குளறுபடிகளால் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இடம்பெறவில்லை.

தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் ஏதும் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய இரத்து செய்யபடவில்லை. இவ்வாறான நிலையில் எவ்வாறு எமக்கு வழங்கிய சமையல் எரிவாயு சிலிண்டர் சின்னத்தை ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்க முடியும்.

எமக்கு வழங்கிய சிலிண்டர் சின்னத்தை ஜனாதிபதி வேட்பாளரான ரணில்விக்கிரமசிங்கவுக்குவழங்கியுள்ளதால்எமதுஅரசியல்செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எமக்கும்ஜனாதிபதிக்கும்இடையில் தொடர்பு இருப்பதாக மக்கள் கருதகூடும். ஆகவே ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள சின்னத்தை இரத்து செய்து அவருக்கு பொருத்தமான சின்னத்தை வழங்குங்கள் என்பதை ஆணைக்குழுவிடம் வலியுறுத்தி முறைபாடளித்துள்ளோம். - என்றார். (05)

# ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு கோரி களமிறங்கினார் விஜயகலா மகேஸ்வரன்



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சையாக 'காஸ் சிலிண்டர்' சின்னத்தில் போட்டியிடவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு கோரி யாழ் மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரம் சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலாமகேஸ்வரன் தலைமையிலான யாழ். மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளனர்.

சனிக்கிழமை காலை நெடுந்தீவுக்கு விஜயம் மேற்கொண்ட முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் யாழ். மாவட்ட ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளருமான விஜயகலா மகேஸ்வரன் தலைமையிலான அணியினர் நயினாதீவு, அனலைஷதீவு பகுதிகளில் மக்களை சந்தித்துக் கலந்துரையாடியதோடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவான துண்டு பிரசுரங்களை விநியோகித்து தேர்தல் பிரச்சாரத்திலும் ஈடுபட்டுள் ளனர்.

இதேவேளை, ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க அனுராதபுரத்தில் ஜெய மகா போதி விகாரையில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டுள்ளதோடு, அனுராதபுரத்தில் இடம்பெறும் முதலாவது தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# தந்தை செல்வா நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்தி பரப்புரையை ஆரம்பித்த வேட்பாளர் அரியநேத்திரன்





தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரன் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணியளவில் தந்தைசெல்வாநினைவுத்தூபியில் அன்னாரின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இதில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், சிவில் சமூக பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டு மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தமிழ் பொது வேட்பாளர் அறிமுக பொதுக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து, வடக்கு, கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் இரண்டு கூட்டங்களும் மாவட்டங்களுக்கு ஒரு பெரும் பொதுக் கூட்டமும் பொதுவேட்பாளர் கலந்துகொள்ளும் கூட்டமாக இடம்பெறதிட்டமிடப்பட்டுள்ளது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேர்தல் வாக்குறுதியாக மட்டும் இருக்கக்கூடாது

இலங்கையின் நிறைவேற்று அரசுத் தலைவர் ஆட்சி முறையைத் தான் ஆட்சிக்கு வந்ததும் ஒழிக்கப் போகிறார் என்று எதிர்க் கட்சித் தலைவரும் அரசுத் தலைவர் தேர்தல் வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ திடீரென அறிவித்திருக்கிறார்.

”நிறைவேற்று அரசுத் தலைவர் முறைமையை மாற்றுவதாக கடந்த கால தலைவர்கள் வாக்குறுதிகளை வழங்கினர். ஆனால் அவர்கள் பதவியேற்றவுடன் அதனை நிறைவேற்றத் தவறினர். எனக்கு அதிகாரம் அல்லது பதவி ஆசை இல்லை. அதனால் ஆட்சிக்கு வந்ததும் நாடாளுமன்றத்தை மையமாக வைத்து நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பலப்படுத்துவேன்” என்று தெரிவித்திருக்கின்றார்.

அண்மைக் காலமாக மறந்து போய்விட்ட விடயத்தைத் திடீரெனக் கையில் எடுத்துப் பரப்பைக் கிளப்பியிருக்கிறார் சஜித். நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறையை ஒழிப்பது என்பது கடந்த இரண்டு தசாப்த காலத்திற்கு மேலாகவும் தலைவர்களால் பேசப்பட்டு வரும் விடயம் என்றாலும் பதவிக்கு வந்த பின்னர் அதனை ஒழிப்பதற்கு இதுவரையில் எவரும் விரும்பியதில்லை. கடைசியாக அந்தப் பதவியில் அமர்ந்திருக்கும் தற்போதைய அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அதற்கான மிக மோசமான ஒரு உதாரணம்.

1978 அரசமைப்பு மூலம் அறிமுகமான இந்த நிறைவேற்றதிகார அரசுத்தலைவர் முறையை ஒழிக்கவேண்டும் என்கிற முழக்கம் 1994இல் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சித்த சந்திரிக்கா அம்மையாரால் தேர்தல் மேடைகளில் ஏற்றப்பட்டுவிட்டது. அந்த வாக்குறுதியை வழங்கியே அவர் இரண்டு தடவைகள் அதிகாரத்தில் இருந்தாலும் தனது ஆட்சிக் காலம் முழுவதும் அதனைக் கைவிடுவதற்கு அவர் தயாராக இருக்கவில்லை. அதிகாரத்தின் மீதான ஆசை அந்தமாதிரியானது. அதன் பின்னர் மகிந்த ராஜபக்ச ஆட்சியைப் பிடிக்கும்போதுகூட நிறைவேற்றதிகார அரச தலைவர் முறையை ஒழிப்பேன் என்று வாக்குறுதியளித்தார். அது தொடர்பாக தனது கூட்டணிக் கட்சிகளுடன் ஒப்பந்தங்களையும்கூடச் செய்து கொண்டார். ஆனால் கடைசியில் அவரது இரண்டு பதவிக் காலங்களிலும் அதற்கான கடுகளவு முயற்சிகூட எடுக்கப்படவில்லை.

மைத்திரி – ரணில் கூட்டணி ஆட்சிக் காலத்தில் அதிகாரங்களைக் குறைப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டது. சில அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. ஆனால், அடுத்து வந்த கோட்டாபய அதனைத் திரும்பவும் தலைகீழாக்கி அரசுத் தலைவரின் அதிகாரங்களை மீண்டும் உச்சிக்குக் கொண்டு சென்றுவைத்துவிட்டார். சந்திரிக்காவின் காலத்தில் இருந்து நிறைவேற்று அதிகார ஆட்சி முறையை ஒழிக்கவேண்டும் என்பதில் அக்கறையோடு செயற்படுபவராகத் தன்னை அடையாளம் காட்டி வந்தவர் ரணில் விக்கிரமசிங்க, ஆனால் சந்தர்ப்ப வசத்தால், மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படாமல், நாடாளுமன்றம் என்கிற பின் கதவால் அதிகாரத்திற்கு வந்த பின்னர், இப்போது நிறைவேற்று அதிகார முறைமை ஒழிப்புப் பற்றிப் பேசவேண்டிய அவசியம் இல்லை என்றுகூறித் தனது பச்சோந்தித்தனத்தை வெளிப்படுத்தினார் ரணில்.

இத்தகைய நீண்ட வரலாற்றைக் கொண்ட நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் ஆட்சி முறையை ஒழிப்பேன் என்கிற கதையைத்தான் சஜித் பிரேமதாச இப்போது கையில் எடுத்திருக்கின்றார். இன்றைய நிலையில் இது மக்களின் கவர்ச்சிக்குரிய வாக்குறுதியா என்பது கேள்விக்குரியதான். ஆனால் ரணிலுக்கு நெருக்கடியையும் சவாலையும் கொடுக்கக்கூடியது. அந்த வகையில் தனது எதிராளியை மடக்குவதற்கும் தேர்தலில் வெற்றியைப் பெறுவதற்குமான நகர்வாக எதிர்க் கட்சித் தலைவர் இதனைச் செய்திருந்தால் அது கண்டனத்துக்குரியது. இது வெறும் தேர்தல் வாக்குறுதியாக மட்டும் இருக்கக்கூடாது.

ஒருவேளை அவர் தேர்தலில் வெற்றிபெற்றால் தனது வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும். அதற்கான சமூக அழுத்தங்களை இப்போதே ஏற்படுத்த வேண்டியது அவசியம்.



## நேரடி மோதலுக்கு தயாராகிறதா நேட்டோ ?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

நேட்டோவால் ஆயுதம் மற்றும் பயிற்சியளிக்கப்பட்ட உக்ரேனிய இராணுவம் கூர்ஸ்க் (Kursk) மோதலில் சம்பந்தப்பட்டிருந்தது என்ற உண்மை அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. உக்ரேனிய போரின் ஒரு குறிப்பிடத்தக்க திருப்புமுனையை இந்த மோதல் குறிக்கின்றது.



### நேட்டோவின் ஆயுதம்:

இதற்கு முன்னர் ரஷ்ய நகரங்கள் மற்றும் உள்கட்டமைப்புகள் மீது உக்ரேன் ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தியது. முந்தைய ஊடுருவல்கள் உக்ரேனின் இராணுவ உளவுத்துறையின் வழிகாட்டுதலின் கீழ் இராணுவப் பிரிவுகளால் நடத்தப்பட்டன.

இரண்டரை ஆண்டுகால போருக்குப் பிறகு ரஷ்யப் படைகளிடம் உக்ரைன் தொடர்ந்து அதன் நிலப்பரப்பை இழந்து வருகிறது. இப்போர் ஏற்கனவே அரை மில்லியன் உயிரைப் பறித்துள்ளது. அத்துடன் ஜூலை 16இல், ஒரு புதிய சட்டம் உக்ரைனில் நடைமுறைக்கு வந்தது. அது 18 முதல் 60 வயதுக்குட்பட்ட மில்லியன் கணக்கான உக்ரேனிய ஆண்களை இராணுவ சேவைக்கு கட்டாயப்படுத்தியுள்ளது.

### நேட்டோ -ரஷ்யா நேரடி மோதல்:

உக்ரேனிய ஊடுருவலுக்கு அமெரிக்கா மற்றும் நேட்டோவின் ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதாவது நேட்டோ நேரடியாகவே ரஷ்யாவை இலக்கு வைக்கிறது என்பது இதன் பொருள்.

இந்தத் தாக்குதலில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பல இராணுவ வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. ரஷ்ய விமானத் தளங்கள் மற்றும் ரஷ்யாவிற்குள் ஆழமான பிற இலக்குகளைத் தாக்க அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஏவுகணைகளைப் பயன்படுத்த உக்ரேனுக்கு வோஷிங்டன் இன்னும் அனுமதி வழங்கவில்லை. அப்படியிருந்தும் கூர்ஸ்க் மோதலில் அமெரிக்க ஆயுதங்கள் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த மே மாதம், இங்கிலாந்து வெளியுறவு மந்திரி டேவிட் கேமரூன் ரொய்ட்டர்ஸிடம், பிரிட்டன் வழங்கிய நீண்ட தூர ஏவுகணைகளை உக்ரேன் ரஷ்ய எல்லையைத் தாக்கப் பயன்படுத்தலாம் என்று கூறினார்.

ஏப்ரல் மாதம், பைடன் நிர்வாகம் 190 மைல்களுக்கும் அதிகமான தூரத்தைத் தாக்கும் திறன் கொண்ட நீண்ட தூர ஏவுகணைகளை உக்ரேனுக்கு வழங்கப்பட்டதை உறுதிப்படுத்தியது. இந்த ஆயுதங்களை பயன்படுத்தி கடந்த மே மாதம் கிரிமியாவில் உள்ள விமானப்படை தளம் மீது உக்ரேன் தாக்குதல் நடத்தியது. அசோவ் கடல் பகுதியில் உள்ள பெர்டியன்ஸ்க் துறைமுகத்தைத் தாக்கவும் இந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன.

அமெரிக்கா இரகசியமாக ஆயுதங்களை வழங்கியதை உறுதிப்படுத்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன், அவைகள் இப்போது உக்ரேனில் உள்ளன, சில காலமாக உக்ரேனில் உள்ளன என்று கூறினார்.

ஜூலை மாதம் அமெரிக்க தேசிய பாதுகாப்பு 'எங்கும்' தாக்க அமெரிக்கா வழங்கிய ஆயுதங்களைப் பயன்படுத்த உக்ரேனை அமெரிக்கா அனுமதிக்கிறது என்று வலியுறுத்தினார்.

இன்றுவரை, ரஷ்யாவிற்குள் ஆழமான தாக்குதல்களை நடத்த அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட




நீண்ட தூர ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. எவ்வாறிருப்பினும், கூர்ஸ்க் தாக்குதல் மீதான தற்போதைய ஊடகப் பரப்புரைகள்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........


# நேரடி மோதலுக்கு தயாராகிறதா நேட்டோ ?

4ம் பக்க தொடர்ச்சி...........

மீண்டுமொருமுறை உக்ரேனை உசுப்பேத்தி விடும் உத்தியாகவே கருதப்படுகிறது.

### கூர்ஸ்க் போர்க்களம்:

எண்பத்தொருஆண்டுகளுக்குப்முன்புகூர்ஸ்க்நிலப்பரப்பின்




ஒரு பகுதியில் ரஷ்யாவிற்கு எதிராக ஏவி விடப்பட்ட ஜேர்மன் கவச வாகனங்கள் அமெரிக்க வாகனங்களுடன் இணைந்து, உக்ரைன் சண்டையிட்டு வருகின்றது என்பதுதான் இன்றைய நிலையாகும்.

இரண்டாம் உலகப் போரில் சோவியத் படைகள், அமெரிக்கா, பிரான்ஸ்மற்றும்இங்கிலாந்துடன்கூட்டுச்சேர்ந்து, நாஜி ஜேர்மனியின் படைகளை தீர்க்கமாகத் தோற்கடித்த போரே கூர்ஸ்க் (Kursk) போராகும். கூர்ஸ்க் டாங்கி போர் (யழிமிமியிள லிக்ஷீ லுற்ஷவிவ) என்று அழைக்கப்பட்ட இது 1943 கோடையில் தென்மேற்கு ரஷ்யாவில் இடம்பெற்றது.

இதன் இறுதி விளைவாக சோவியத்துக்கு வெற்றி கிடைத்தது. கூர்ஸ்க் போர் என்பது போர் வரலாற்றில் மிகப்பெரிய (Battle of Tanks) டாங்கிப் போராகும். இப்போருக்கு முன்னர் நடந்த ஸ்டாலின்கிராட் போருடன், ஐரோப்பியப் போரின் அரங்கில் குறிப்பிடப்பட்ட இரண்டு திருப்புமுனைகள் ஏற்பட்டன.

### நேட்டோ தயவில் உக்ரேன்:

தற்போதய கூர்ஸ்க் தாக்குதல் நேட்டோவின் கீழ் உக்ரேனுக்கான மேற்கத்திய ஆதரவினையும், ஆயுத தளவாட வழங்கலையும் மறுசீரமைத்துள்ளமை தெளிவாக தெரிகிறது. அத்துடன் நூறாயிரக்கணக்கான நேட்டோ துருப்புக்களை முழு அளவிலான போரில் ஈடுபடுத்துவதற்கான ஓர் உயர்நிலை தயார்நிலையில் வைக்க நேட்டோவின் படைகளை மறுசீரமைப்பதற்கான தொலைநோக்கு திட்டங்களையும் தற்போது செயல்படுத்தி வருகிறது.

அமெரிக்க பாதுகாப்புத் துறை உக்ரேனுக்கு மேலும் 125 மில்லியன் டொலர்கள் ஆயுதங்களை அனுப்புவதாக அறிவித்துள்ளது.

போர் ஆய்வுக்கான பயிலகத்தின் கூற்றுப்படி டாங்கி எதிர்ப்பு அமைப்புகள்; ரொக்கட் ஏவிகள், ஒளியியல்-கண்காணிப்பு, டாங்கி எதிர்ப்பு வழிகாட்டும் ஏவுகணைகள்; பல்நோக்கு ரேடார்கள்; பல்நோக்கு சக்கர வாகனங்கள்; சிறிய ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் கூடுதல் ஆயுத உபகரணங்கள் மற்றும் வெடிமருந்துகள் என்பன அவற்றில் அடங்குகின்றன.

### கூர்ஸ்க்கில் மிகப் பெரிய ஊடுருவல்:

கடந்த 6/8/24 செவ்வாய்க்கிழமை அதிகாலை, உக்ரேனிய படைகள் ரஷ்ய பிராந்தியத்திலுள்ள எல்லைப் பகுதியான



கூர்ஸ்க்கில் மிகப் பெரிய ஊடுருவலைத் தொடங்கின. ரஷ்ய இராணுவ அதிகாரிகளின் கூற்றுப்படி, இந்த தாக்குதலில் உக்ரேனிய ஆயுதப் படைகளின் ஒரு பிரிவிலுள்ள 1,000ம் துருப்புக்களுடன், ஏழு டாங்கிகள் உட்பட 50 கவச வாகனங்கள் ஈடுபட்டன.

ரஷ்ய - உக்ரேனிய துருப்புக்களுக்கு இடையே மோதல்கள் எல்லைக்கு வடக்கே 7 கிலோமீற்றர் வரை நடந்தன. ஐரோப்பாவிற்கு விநியோகிக்கப்படும் ரஷ்ய எரிவாயு வழங்கும் சுட்ஜா நகரில் உள்ள ஒரு எரிவாயு அளவீட்டு நிலையத்தை உக்ரேனிய துருப்புக்கள் குறிவைத்துள்ளன என்றும் தெரிவித்தன.

ஆயினும் புதன்கிழமை மாலைக்குள் இந்த தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக ரஷ்ய அரசு அறிவித்தது. இருப்பினும், கூர்ஸ்க் பிராந்தியத்தில் அவசரகால நிலை இன்னும் நடைமுறையில் உள்ளது.

அப்பகுதியை இலக்கு வைத்து உக்ரேனிய ஆயுதப் படைகள் நடத்திய குறைந்தது ஏழு ஏவுகணைகளை ரஷ்ய வான் பாதுகாப்பு ஏவுகணைகள் சுட்டு வீழ்த்தின.

ஆறு குழந்தைகள் உட்பட 31 குடிமக்கள் காயமுற்றிருப்பதை ரஷ்ய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். இறந்தவர்களின் உத்தியோகபூர்வ எண்ணிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை. ஆனால், ரஷ்ய ஊடகங்கள் பல துணை மருத்துவர்கள் கொல்லப்பட்டதாக தெரிவித்தன.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1180/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cococola M - 70/=
Pepsi M - 70/=
Swehpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

## கணவன் பெற்றோல் ஊற்றி தீ வைத்த பெண் சிகிச்சை பயனின்றி உயிரிழப்பு

வென்னப்புவ பிரதேசத்தில் கணவனால் பெற்றோல் ஊற்றி தீ வைக்கப்பட்ட மனைவி பலத்த காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், சிகிச்சைபலனின்றி உயிரிழந்துள்ளார் என வென்னப்புவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கணவன் - மனைவிக்கு இடையே ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாக மனைவியின் உடலில் கணவன் பெற்றோல் ஊற்றி தீ வைத்துள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்தில் 43 வயதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, வென்னப்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

(05)

## வாகரையில் விபத்து: 8 வயது சிறுவன் சாவு

### வான் சாரதி கைது

வாகரை பிரதான வீதியிலுள்ள பனிச்சங்கேணி பாலத்தில் வீதியை கடந்த சிறுவன் மீது வேன் மோதியதில் 8 வயது சிறுவன் உயிரிழந்த சம்பவம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை மீராவோடையைச் சேர்ந்த 8 வயது சிறுவனே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

இந்த சிறுவனுடன் அவனது தாய், தந்தையர் முச்சக்கரவண்டியில் நேற்று இரவு பயணித்துக்கொண்டிருந்தபோது பனிச்சங்கேணி பாலத்தில் ஒட்டோவின் முன்பக்க மின் விளக்கு எரியாமல், பழுதடைந்துபோனதால், பாலத்தில் ஓட்டோவை நிறுத்திவிட்டு அதனை சிறுவனின் தந்தையார் சரி செய்துகொண்டிருந்துள்ளார்.

இந்நிலையில் சிறுவனின் தாய் ஓட்டோவில் இருந்து இறங்கி பாலத்தின் எதிர்ப்பக்கமாக சென்றுள்ளார்.

அப்போது சிறுவன் வீதியின் குறுக்காக கடந்து தாயாரிடம் செல்ல முற்பட்டபோது வாகரையை நோக்கி பயணித்த வேன் சிறுவனை மோதியுள்ளது.

இதில் படுகாயமடைந்த சிறுவன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளான்.

இதனையடுத்து வேன் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைவாகரை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## இந்துமத எழுச்சியாக இடம்பெற்ற காரைதீவு – மண்டூர் பாதயாத்திரை

### 4000 அடியார்கள் பக்தி பூர்வமாக பங்கேற்பு





(சகா)

இந்துமத எழுச்சியாக காரைதீவு - மண்டூர் மாபெரும் பாதயாத்திரை சனிக்கிழமை இடம்பெற்றது. சுமார் 4000 அடியார்கள் பக்தி பூர்வமாக பங்கேற்றனர்.

வரலாற்று பிரசித்தி பெற்ற 'சின்னக் கதிர்காமம்' என அழைக்கப்படும் மண்டூர் ஸ்ரீமுருகன் ஆலயத்துக்கான வருடாந்த தலபாதயாத்திரை கடந்த சனிக்கிழமை காரைதீவிலிருந்து அதிகாலை நான்கு மணியளவில் ஆரம்பமாகியது.

ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று (திங்கட்கிழமை) தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருக்கிறது.

காரைதீவில் இருந்து அதிகாலை நான்குமணிக்குஆயிரக்கணக்கான பக்தர்களுடன் பாதயாத்திரை அலங்கரிக்கப்பட்ட முருகப்பெருமான் படங்களுடன் நந்திக் கொடி சகிதம் ஏழு உழவு இயந்திரங்கள் நகர அடியார்கள் பேரணியும் நகர்ந்தது. அரோகரா கோஷம் விண்ணைப் பிளக்க யாத்திரை உணர்வு பூர்வமாக இடம்பெற்றது. பஜனைகள் குழுவினரின் பஜனை பக்திப் பாடல்களும் வழிநெடுகிலும் இடம்பெற்றன.

சுமார் ஐந்து கிலோமீட்டர் தூரத்திற்கு அடியார்கள் அணி நீண்டிருந்தது. காவடியாட்டமும் இடையே இடம்பெற்றது.

காரைதீவு இந்து சமய விருத்திச்சங்கம் இந்த பாரிய பாதயாத்திரையை வருடாந்தம் நடத்தி வருகிறது.

காரைதீவிலிருந்து அதிகாலை 4 மணிக்கு புறப்பட்ட பாதயாத்திரை கல்முனை நற்பிட்டிமுனை சேனைக்குடியிருப்புகிட்டங்கிநாவிதன்வெளிவேப்பையடி தம்பலவத்தை ஊடாக பகல் 12 மணியளவில் மண்டூரைச் சென்றடைந்தது.

இடையில் பல இந்து அன்பர்கள் அடியார்களுக்கு நீராகாரம் காலையுணவு தண்ணீர் போத்தல்கள் பழரசம் பால் சோறு என்று தாராளமாக வழங்கினார்கள்.

தம்பலவத்தையில் பிரபல சட்டத்தரணி நடராசா சிவரஞ்சித் மற்றும் அவரது சகோதரர் ஜீவராஜா( லண்டன்) ஆகியோர் சுமார் 5000 பேருக்கு அன்னதானம் வழங்கினார்கள்.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

## வாக்குகளுக்காகவே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல விடயங்களை செய்ய முயல்வதன் மூலம் ஒருவர் சமூகங்களின் மத்தியில் பகைமை உணர்வை உருவாக்ககூடாது. இந்த விடயத்தில் நாங்கள் எதனை செய்தாலும் நாட்டின் அனைத்து மக்களினதும் ஆதரவு அதற்கு அவசியம்.

இந்த பரிந்துரைகளை வடக்கு கிழக்கிற்கு மாத்திரம் நடைமுறைப்படுத்தும்போது தென்பகுதி மக்கள் குழப்பத்தில் ஈடுபட்டால் அதனை உரியதீர்வாகக் கருதமுடியாது. இவை மிகவும் உணர்வுபூர்வமான விடயங்கள்.

இவற்றிற்கு முதல் நாங்கள் நாட்டைஅபிவிருத்திசெய்யவேண்டும் நாட்டை அபிவிருத்தி செய்தால் மக்கள் சமாதானமாக வாழபழகிக் கொள்வார்கள். நல்லிணக்கம், அமைதி சமாதானம் போன்றவை காணப்படும்.

பொருளாதாரம் தொடர்பில் நாங்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்ற போது வாக்குகளை பெறுவதற்காக மாத்திரம் அரசியல்வாதிகள் இனப் பிரச்சினையைப் பேசுகின்றார்.

இந்த விடயங்கள் குறித்து பேசுவதற்கு முதலில் நாட்டின் பின்னணி உரிய விதத்தில் காணப்படவேண்டும் - என்றார்.

## அர்ஜுன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக சில நீதிமன்ற வழக் குகள் உள்ளன. சிலர் வரி செலுத்துவதற்கு எதிராக வழக்குகளைதாக்கல்செய்கிறார்கள், நீதிமன்ற தீர்ப்புகளுக்குப் பிறகு அவர்கள் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு அதே தொகையை செலுத்துகிறார்கள். நாங்கள் சட்டங்களைத் திருத்துவோம். நீதிமன்ற தீர்ப்பிற்குப் பிறகு வரித் தொகையை வட்டியுடன் வசூலிக்க நடவடிக்கை எடுப்போம்.

சர்வதேச நாணய நிதியத்துடன் வரிநிவாரணம்குறித்துப்பேசுவோம். நீங்கள் சம்பாதித்தவுடன் செலுத்தும் (ஊணபுக்ஷூசி) வரி வரம்பு 100,000 ரூபாயில் இருந்து 200,000 ரூபாயாக உயர்த்தப்படும்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு குறைந்தபட்ச மாதாந்திர உதவித்தொகையாக ரூ. 10 ஆயிரம் தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் வழங்கப்படும்.

அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் அமைச்சரவை 25 ஆக மட்டுப்படுத்தப்படும். இராஜாங்க அமைச்சர்கள் இருக்க மாட்டார்கள். அறிவியல் அடிப்படையில் அமைச்சுக்களை ஒதுக்குவோம் என்றார்.

## முள்ளிவாய்க்காலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்துமலரஞ்சலிசெலுத்தினார்.

அதனை தொடர்ந்து, நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டார், நல்லை ஆதீன குருமுதல்வரை சந்தித்து ஆசி பெற்றார்.

பின்னர்கிறிஸ்தவதேவாலயத்திற்குச் சென்று வழிபட்டார். அருட்தந்தையர்களைச்சந்தித்துஆசிபெற்றார்.

பிற்பகல் 3 மணியளவில் முள்ளிவாய்க்காலைச்சென்றடைந்த அவர், அங்கு பொதுச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினார்.

இந்த அஞ்சலியின்போது முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப்பேச்சாளர் துளசி, அரசியல் பத்தி எழுத்தாளரான நிலாந்தன் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து தமிழ் பொது வேட்பாளரின் முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டம் முல்லைத்தீவில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டம் வடமாகாண முன்னாள் விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன்தலைமையில்நடந்தது. இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம்சித்தார்த்தன், செல்லம் அடைக்கலநாதன் , முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தன், யாழ் மாநர முன்னாள்மேஜர்மணிவண்ணன், ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் வேந்தன், செயலாளர் துளசிஉள்ளிட்டஅரசியல்பிரமுகர்கள் மற்றும் அரசியல் பத்தி எழுத்தாளர்களான நிலாந்தன், யதீந்திரா உள்ளிட்டவர்கள் பேச்சாளர்களாக இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

நூற்றுக்கணக்கானவர்கள் அதிலும் பெரும்பாலானவர்கள் பெண்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## ஜப்பான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற தொனிப்பொருளின் கீழ் மூன்றாவதுமுறையாகநடைபெறும் இந்த மாநாடு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மற்றும் பல்வேறு நாடுகளின் அரச தலைவர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

உலகளாவிய தலைமைத்துவத்தில் மேற்கினால் இனிமேலும் ஆதிக்கம் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இவ்வாறான நிலையில்,உலகின்தெற்குநாடுகளை வலுப்படுத்தும் இந்தியாவின் முயற்சிகளைப் பாராட்டுகிறார் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவித்ததாவது: உலகின் தெற்கு நாடுகள் எதிர்கொள்ளும்பலபிரச்சினைகளில் பொதுவான நிலைப்பாட்டை எட்ட உதவும். மேற்குலகம் தொடர்ந்தும் உலகத் தலைமைத்துவத்தின் மீது ஆதிக்கம் செலுத்த முடியாத நிலைக்கு வந்துள்ளது. இப்போது பிரச்சினைக்குரிய பகுதியாகவும் மேற்குலகம் மாறியுள்ளது. உக்ரெய்னும் காசாவும் அதற்கு முக்கியமான உதாரணமாகும்.

இந்தச் சூழலில், உலகளாவிய தெற்கு நாடுகளை வலுப்படுத்தும் இந்தியாவின் முயற்சிகளை நாம் பாராட்ட வேண்டும்.

இலங்கை தனது பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைவதற்கு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளைகுறிப்பிடுகிறேன். உத்தியோக பூர்வ கடன் வழங்கிய நாடுகள், சீனா எக்ஸிம் வங்கி, சர்வதேச நாணயநிதியம், உலகவங்கி, ஆசிய அபிவிருத்திவங்கியுடனும்இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கான ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

இரண்டு வருடங்களாக இலங்கை மக்கள் எதிர்கொண்ட சிரமங்களைகுறைத்துவங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்தியாவின் பெருந்தன்மையே காரணம்என்பதை இத்தருணத்தில் குறிப்பிட வேண்டும்.

நமது இரு நாடுகளும் ஏற்றுக்கொண்ட'நோக்கம்'என்றஅறிக்கையானது, 2000ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் நமது இரு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை நினைவுபடுத்தும் அதேவேளையில், எதிர்காலத்திலும் நெருங்கிய உறவுகளை பேணுவதற்கான வழியைத் திறந்துள்ளது. இதனால் பல துறைகளில்நமதுஇருநாடுகளுக்கும் இடையே ஆழமான பிணைப்பு ஏற்படும்.

தற்போதுவிரிவானபொருளாதார மற்றும்தொழில்நுட்பஒப்பந்தத்தை எட்டுவதற்கான இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளோம். மின்சாரம், போக்குவரத்துமற்றும்தரைமார்க்க இணைப்புகள் ஆரம்பிக்கப்படும்.

மேலும் திருகோணமலை துறைமுக அபிவிருத்தி மற்றும் ஏனைய இணக்கம் காணப்பட்ட திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தியுள்ளோம்.

இந்த திட்டங்கள் எமது அறிவையும் தொழில்நுட்பத்தையும் மேம்படுத்துவதற்கும்இலங்கையை டிஜிட்டல்பொருளாதாரத்தை நோக்கி நகர்த்துவதற்கும்உதவும். அதற்காக இந்தியா வழங்கும் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

வங்காள விரிகுடா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் தற்போது அபிவிருத்தியின் மையமாக மாறி வருகிறோம். எனவே, பிம்ஸ்டெக் (BIMSTEC) அமைப்பின்முக்கியத்துவம்நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

'பிம்ஸ்டெக்' சங்கத்தின் உறுப்பினர் என்ற வகையில் இலங்கை, இந்தியாவுடன் நெருக்கமான பொருளாதார ஒருங்கிணைப்புடன், ஜப்பானில் இருந்து இந்தியா வரையில் பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடன், பிராந்தியத்தின் விரிவான பொருளாதார கூட்டிணைவான (RCEP) உறுப்புரிமையை இலங்கையைபெற்றுக்கொள்ளவும் இலங்கை முன்வந்திருக்கிறது. வங்காள விரிகுடா பகுதி நமது பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்பதையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சி, நாகரிகங்களின் மோதல், வரலாற்றின் முடிவுகள் போன்ற கருத்துக்களால் உருவான மேற்கத்திய மேலாதிக்கத்தின் 1989க்குப் பிந்தைய சகாப்தம் இப்போது முடிவுக்கு வருகிறது.

இந்த உச்சிமாநாடு மற்றும் இதற்கு நிகரான 'பிரிக்ஸ்' யயூணுாளீீமற்றும்றூ20குழுவின் விரிவாக்கம் என்பன உலகளாவிய தெற்கில் ஒரு பாரம்பரியத்தை விட்டுச்செல்லகக்கூடிய புதிய ஒழுங்குக்கு வழிவகுக்கும்.

சுதந்திரம் பெற்றதில் இருந்து ஆபிரிக்க - ஆசிய நாடுகளை ஒன்றிணைக்க நடவடிக்கை எடுத்துவரும் நம் அனைவருக்கும் இடையே நெருக்கமான ஒற்றுமையை கொண்டு வருவதற்காக ஆற்றிவரும் பணிக்கும் நன்றி தெரிவிக்கிறேன் - என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



## கசிப்பு விற்றவரிடம் லஞ்சம்பெற்ற பொலிஸ் அதிகாரிகள் மூவர் கைது

கசிப்புவிற்பனையாளரிடமிருந்து 6000 ரூபா இலஞ்சம் பெற்ற பெந்தோட்டை பொலிஸ் நிலைய அதிகாரிகள் மூவர் கொஸ்கொடை பொலிஸ் நிலைய அதிகாரிகளால் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தசம்பவத்தில் பொலிஸ் உப பரிசோதகர், பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் சாரதி ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலஞ்சம் வழங்கிய நபர் தனதுகையடக்கத்தொலைப்பேசியில் இலஞ்சம் கொடுப்பதை காணொளியாக பதிவு செய்து எல்பிட்டிய சிரேஸ்ட பொலிஸ் அதிகாரிக்கு அனுப்பி வைத்துள்ளதையடுத்து சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர்.

மேலும், கைதான மூவரும் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பலப்பிட்டிய நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.(05)

## சமாதான நீதிவானாக சத்திய பிரமாணம்



(பி.கேதீஸ்)

தலவாக்கலை நகரை வசிப்பிடமாக கொண்ட செபஸ்டியன் அன்டன் இக்னேஷியஸ், அகில இலங்கை சமாதான நீதிவானாக நுவரெலியா மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதி கே.டபிள்யு.கேல்.எல்.பிரபுத்திகா லங்காஷினி முன்னிலையில் சத்திய பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம், வட்டகொடை தமிழ் மகா வித்தியாலயம், கிரேட்வெஸ்ன் தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் பாட ஆசிரியராக கடமையாற்றினார். தற்போது நுவரெலியா கல்வி வலயத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றுவதுடன் அப்பாட விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகின்றார். இவர் சிறந்த கிட்டார் வாத்திய கலைஞர் என்பதும் குறிப்பிடத்தக்கது.(05)



# தமிழ் பொதுவேட்பாளர் குறித்த தமிழர்களின் நிலைப்பாடுபற்றி தமிழரசுக் பிரதிநிதிகளிடம் கேட்டறிந்த இந்திய உயர்ஸ்தானிகர்

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.சிறிதரன் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோருடனான சந்திப்பின்போது தமிழ் பொதுவேட்பாளர் மற்றும் அதுகுறித்த தமிழ் மக்களின் நிலைப்பாடு பற்றி இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா கேட்டறிந்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் நிலையில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளிடம் கேட்டறிந்த உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, நாட்டின் சமகால அரசியல் களநிலைவரம், தமிழ் பொதுவேட்பாளர் களமிறக்கப்பட்டுள்ளமை, அதுகுறித்து தமிழ் மக்களின் நிலைப்பாடு, தமிழ் அரசுக் கட்சியின் நிலுவை வழக்கு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார்.

அதற்குப் பதிலளித்த சிறிதரன் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை களமிறக்கவேண்டும் என்ற எண்ணப்பாடு தோற்றம் பெற்றமைக்கான காரணங்கள் மற்றும் அதுகுறித்த தமது நிலைப்பாடு பற்றி விரிவாக விளக்கமளித்தனர். (05)

# ஹெரோயினுடன் ஒருவர் தெஹிவளையில் கைது

தெஹிவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்டவனரதனவீதிப்பகுதியில் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்தசந்தேகநபர்சனிக்கிழமை தெஹிவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகதெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டநபரிடம்இருந்து 17கிராம்300மில்லிகிராம்ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர் களுபோவில பிரதேசத்தைசேர்ந்த50வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் தெஹிவளை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

# ரமேஸ்வரன் நேரடி வருகை



(பி.கேதீஸ்)

பூண்டுலோயா சீன் பழைய தோட்டத்தில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களை நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இ.தொ.காவின் தவிசாளருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன் நேரில் சென்று பார்வையிட்டார் .



வெள்ளிக்கிழமை இரவு ஏற்பட்ட திடீர் தீ விபத்து காரணமாக பூண்டுலோயா பழைய தோட்டத்தில் 20 குடியிருப்புக்களை கொண்ட தொடர் லயன் குடியிருப்பில் 17 வீடுகள் முற்றாக எரிந்து சேதமடைந்துருந்தது.

இதனை நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக நுவரெலியா மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினரும்இ.தொ.கா வின் தவிசாளருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய உதவிகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

# யாழில் மனவளர்ச்சி குன்றிய யுவதி மீது துஷ்பிரயோகம்

## சித்தப்பா உட்பட மூவர் கைது

யாழ்ப்பாணத்தில்மனவளர்ச்சிகுன்றியயுவதியை பாலியல் துஸ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சிறிய தந்தை உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கைதான மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சுகவீனம் காரணமாக இந்த யுவதியை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தவேளையில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில் யுவதி கர்ப்பமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தபோது தாயின் சகோதரியினது கணவர் (சித்தப்பா) மற்றும் இரு இளைஞர்கள் என மூன்று பேர் இணைந்து யுவதியை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் பாலியல் துஸ்பிரயோகத்துக்கு உள்ளாக்கி வந்துள்ளனர். சில தடவைகள் கூட்டு வன்புணர்வுக்கும் யுவதியை உட்படுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த நெல்லியடி பொலிஸார் யுவதியின் சிறிய தந்தை உள்ளிட்ட மூவரை கைது செய்தனர்.

விசாரணைகளின் பின்னர், பருத்தித்துறை பதில் நீதிவான் முன்னிலையில் மூவரையும் முற்படுத்தியதையடுத்து, பதில் நீதிவான் சந்தேக நபர்களை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# ஸ்ரீமன் நாராயணன் ஆலய சமுத்திர தீர்த்தோற்சவம்





(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு ஸ்ரீமன் நாராயணன் ஆலய அலங்கார உற்சவத்தின் சமுத்திர தீர்த்தோற்சவம் இன்று (திங்கட்கிழமை) நடைபெறவிருக்கிறது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் அதற்கான கிரியைகளை நடாத்தி வருகின்றார்.

ஆலய பரிபாலன சபை தலைவர் ம.ஜெகநாதன் தலைமையில் அலங்கார உற்சவம் நடைபெற்று வருகிறது.

கடந்த காலங்களைவிட சிறப்பாக பாற்குடபவனி வேட்டைத் திருவிழா வரலெட்சுமி விரதம் தினத் திருவிழா சப்புற ஊர்வலம் என்பன நடைபெற்று வந்தன.

இன்று (திங்கட்கிழமை) சமுத்திர தீர்த்தோற்சவம் வைரவர் பூஜையுடன் இவ்வருட மகோற்சவம் நிறைவடையும்.

# இலங்கை ஜனநாயக முன்னணி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு



(எம்.எப்.றிபாஸ்)

இலங்கை ஜனநாயக முன்னணி கட்சி சஜித் பிரேமதாசாவை ஆதரிப்பதாக தெரிவித்துள்ளனர்.

கட்சியின் தலைவர் ஏ.பீ. கமால்தீன் தலைமையில் செயலாளர் எஸ்.ஜெயராஜ், சிரேஷ்ட பிரதி தலைவர் எம்.ஐ.எஸ்.ஹமீட் ஆகியோர் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசாவை சந்தித்து தங்களது கோரிக்கைகளடங்கிய மகஜரை கையளித்னர்.

சஜித் பிரேமதாசாவின் வெற்றிக்கு நாடுதழுவியரீதியில் தமது கட்சியும், கட்சி உறுப்பினர்களும் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடவுள்ளதாக தலைவர் கமால்தீன் மேலும் தெரிவித்துள்ளார்.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் யாழில் விசாரணை நடவடிக்கைகள்



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெற்றன.

யாழ்ப்பாணம், சங்கானை, காரைநகர், நல்லூர், சாவகச்சேரி, சண்டிலிப்பாய், நெடுந்தீவு, ஊர்காவற்துறை மற்றும் வேலணை பிரதேச செயலகங்களை உள்ளடக்கியே இந்த விசாரணைகள் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் நடைபெற்றன.



காலைக்கதிர் Kalaikkathir

# திருக்கோவிலில் இடம்பெற்ற பனம்பொருள் கைப்பணி உற்பத்திப் பொருள்களின் பயிற்சியும் கண்காட்சியும்







(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச செயலகத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட சங்கமன் கிராமத்தில் பனம் பொருள் கைப்பணி உற்பத்திகள் மூலமாக வாழ்வாதாரத்தை உயர்த்தும் முகமாக இடம் பெற்ற பயிற்சி நெறியை பூர்த்திசெய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும் சிறப்பாக நடைபெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் ஏற்பாட்டிற்கமைய புலம்பெயர் உறவுகளின் அனுசரணையில் சிவனருள் பவுன்டேசன் அமைப்பின் நிதிப்பங்களிப்பில்

கடந்த 2024.06.05 திகதி சங்கமன் கிராமத்தில் 40 பயனாளர்களுடன் வாழ்வாதார பயிற்சிநெறியானது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அப்பயிற்சிநெறியில்பயிற்சிபெற்றயுவதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அவர்களின் பனம் பொருள் உற்பத்திகளுக்கான விற்பனை கண்காட்சி நிகழ்வும் நேற்றுமுன்தினம் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுகள் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.இந் நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு பயிற்சிநெறியில் பயிற்சி பெற்ற யுவதிகளுக்கான சான்றிதழ்களை வழங்கி வைத்ததோடு பனம் பொருள் உற்பத்திகளுக்கான விற்பனை கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி எஸ்.நிருபா கணக்காளர் ஏஎல்எம்.றிபாஸ் உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.அனோஜா உஷாந்த் நிர்வாக உத்தியோகத்தர் டி.மங்களா கிராம சேவைக்கு பொறுப்பான நிர்வாக உத்தியோகத்தர் என்.கந்தசாமி சமுர்த்தி பிரிவில் தலைமைபீட முகாமையாளர்எம்.அரசரெத்தினம் சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் ஆர்..புண்ணியசீலன் சிவனருள் பவுன்டேசன் அமைப்பின் தலைவர் .உதயன் பத்மநாதன் பயிற்சி பெற்றவர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(05)

# சுற்றுலா துறையை ஊக்குவிக்க அறுகம்பையில் அரை மரதன்




(ஏ.எல்.எம்.ஷினாஸ்,)

அறுகம்பே அபிவிருத்தி ஒன்றியம் ஏற்பாடு செய்து நடாத்திய அறுகம்பே அரை மரதன் ஓட்டப்போட்டியின் 21.1கிலோமீற்றர் போட்டியில் ஆண்கள் பிரிவில் அவிசாவளயை சேர்ந்த விமல் காரியவசம் முதலாமிடத்தினையும், வெலிமடயை சேர்ந்த ரீ.டபள்யூ.ரத்னபால இரண்டாமிடத்தினையும், டென்மார்க்கை சேர்ந்த பெஸ்டியன் குலோஸ்கோ மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டார். பெண்கள் பிரிவில் கென்யாவைச் சேர்ந்த அனிக்கா பேலிம் முதலாமிடத்தினையும், ஜேர்மனியை சேர்ந்த டீ.அனிக்கா டோன் இரண்டாமிடத்தினையும், அவுஸ்திரேலியாவை சேர்ந்த சஸாலி மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டார்.

சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் பொருட்டு அறுகம்பே அபிவிருத்தி ஒன்றியம் ஏற்பாடு செய்து நடாத்திய அறுகம்பே அரை மரதன் ஓட்டப்போட்டி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பொத்துவில் அறுகம்பே பிரதேசத்தில் கோலாகலமாக இடம்பெற்றது.

உள்நாட்டு, வெளிநாட்டு வீரர்கள் என 260பேர் கலந்துகொண்ட குறித்த மரதன் ஓட்டப்போட்டியானது 21.1 கிலோமீற்றர் அரை மரதன், 10கிலோமீற்றர் மற்றும் 5கிலோமீற்றர் என மூன்று பிரிவுகளாக இடம்பெற்றது. 5கிலோமீற்றர் போட்டியில் சிறுவர்கள், முதியவர்கள் கலந்துகொண்டனர். ஏனைய இரு பிரிவுகளிலும் பிரபல மரதன் ஓட்ட வீரர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



இதன்போது10கிலோமீற்றர் மரதன் போட்டியின் ஆண்கள் பிரிவில்வெலிமடையைசேர்ந்த டீ.எம்.எரந்த தென்னகோன் முதலாமிடத்தினையும், மகியங்கனையை சேர்ந்த கே.எம்.சரத்குமார் இரண்டாமிடத்தினையும், நுவரெலியாவை சேர்ந்த எம்.சௌந்தரராஜன் மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டார். பெண்கள் பிரிவில் இங்கிலாந்து நாட்டை சேர்ந்த பெல்லா றுஸல் முதலாமிடத்தினையும், றீஸ்கா கிஸ்ஜெஸ் இரண்டாமிடத்தினையும் இஸ்ரேல் நாட்டை சேர்ந்த டெஃப்னா டென்போமா மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டார்.

சிறுவர்களுக்கான 5கிலோ மீற்றர் மரதன் ஓட்டப் போட்டியில் கே.றினோஸ் முதலாமிடத்தினையும் எம்.ரீ.எம்.இன்ஷாப் இரண்டா மிடத்தினையும், என்.அனீஸ் மூன்றாமிடத் தினையும் பெற்றுக் கொண்டார். வளந் தோருக்கான 5கிலோமீற்றர் போட்டியில் ஆண்கள் பிரிவில் ஏ.எஸ்.மொஹானி முதலாமிடத்தினையும், மொனிசா டில்சான் இரண்டா மிடத்தினையும், தோமஸ்பீபர்மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டார். பெண்கள்பிரிவுபோட்டியில்அலன் கோல்ப் முதலாமிடத்தினையும், ரைகா வேன்டியர் ஸ்ட்ரியட்டர் இரண்டாமிடத்தினையும், லரீசா பலஸ் மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டார்.

அறுகம்பேஅபிவிருத்திஒன்றியத்தின்தலைவரும், இயன்மருத்துவருமான இஸட்.எம்.ஹாஜித் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் பிரதம அதிதியாகவும், இராணுவத்தின் 242வது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி பிரிகேடியர் களன அமுனுபுர, பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எப்.எம்.உவைஸ் மற்றும் பெடிவே உல்லாச விடுதியின் முகாமைத்துவப் பணிப்பாளர் பொறியியலாளர் பீ.சப்றாஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட பலர் விசேட அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

குறித்த மரதன் போட்டியில் கலந்துகொண்டு முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றுதழ்களுடன் பணப்பரிசில்களும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டது. அறுகம்பே அரைமரதன் போட்டியினை அறுகம்பே அபிவிருத்தி போரம் 6வது தடவையாகவும் நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.(05)

# இனவாதம் மூலம் ஆட்சிக்கு வந்தோர் அழிந்துபோனமையே வரலாறு

## ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளர் உதுமாலெவ்வை



எமதுநாட்டின்அரசியல்வரலாற்றைப்பின்நோக்கிப்பார்க்கும்போது இனவாதத்தினை உருவாக்கி ஆட்சிக்குவந்தவர்கள்எல்லோரும் அழிந்துபோன வரலாற்றை நாம் கண்டுள்ளோம். அதனால்நாட்டின் நலனையும், எதிர்காலத்தையும் நோக்காக்கொண்டு செயற்படும் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரமேதாசாவின் வெற்றிக்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயற்பாட்டாளர்கள் ஈடுபடவேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட செயற்பாட்டாளர்களுக்கான விசேட கூட்டம் ஏறாவூரில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

இரண்டு வருடங்கள் தனது பதவிக்காலம் இருக்கத்தக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திடீரென ஜனாதிபதித் தேர்தலை நடாத்தினார். அப்போதைய காலகட்டத்தில் நாம் தேர்தலுக்குச் சென்றால் தோல்வியடைவோம் என ஆலோசனைகள் வழங்கியபோதும் நான் தேர்தலை நடத்தியே தீருவேன் எனக்கூறி ஜனாதிபதித் தேர்தலை நடத்தினார். அன்று என்ன நடந்தது, அவருடைய கட்சியின் செயலாளராக பதவி வகித்த மைத்திரிபால சிரிசேன ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

2020 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித்தேர்தலில்இனவாதத்தினை உருவாக்கி முஸ்லிம் சமூகத்தை பெரும்பான்மை சமூகத்திடம் வெறுப்பாகக் காட்டி 69 இலட்சம் வாக்குகளைப் பெற்ற முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ தனது பதவிக்காலம் இரண்டரை வருடங்கள் இருக்கத்தக்கதாக தரையில் சில காலமும் நீரில் சில காலமும் ஒளிந்து வாழ்ந்து நாட்டை விட்டு தப்பி ஓடினார்.

அதன் பிறகு ரணில் விக்கிரமசிங்க நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகித்தார். நல்லாட்சி அரசாங்க காலத்தில் இனவாதிகளால் திட்டமிடப்பட்டு உடைக்கப்பட்ட அம்பாறை பள்ளிவாசலை பார்வையிட வருவதாக அன்று பிரதமராக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க அம்பாறை மாவட்டத்திற்கு வருகை தந்து இனவாதிகளால் உடைக்கப்பட்ட அம்பாரை மாவட்ட பள்ளிவாசலினை பார்வையிடாமல் ஒலுவில் விடுதியில் தங்கிவிட்டு சென்ற வரலாற்றையும் நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மறந்துவிடக்கூடாது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள எமது நாட்டுக்கான தலைவரைத் தெரிவு செய்யும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. மறைந்த பெரும் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும்போது முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்தி வாக்குகளை வழங்கி ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கும் அரசாங்கத்தை அமைப்பதற்கும் வித்திட்டார். இதனூடாக எமது சமூகம் தொடர்பான விடயங்களும் நிறைவேற்றப்பட்டன.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரமேதாஸவை ஆதரிப்பது தொடர்பாக கட்சியின் உச்சபீடம் நீண்ட நேரம் ஆலோசித்து வாதப் பிரதிவாதங்கள் நடத்தி நமது சமூகம் தொடர்பான விடயங்களை முன்னிறுத்தி சஜித் பிரமேதாசாவிற்கு ஆதரவு வழங்குவது என தீர்மானிக்கப் பட்டது.

எனவே, சஜித் பிரமேதாசாவிற்கு ஆதரவு வழங்குவது, நாட்டில் வாழும் பெரும்பான்மையான இனமக்களுக்கு மத்தியில் பாரிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. அதனால்ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரமேதாசாவை வெற்றியடையச் செய்வதில் நாம் அனைவரும் அர்ப்பணிப்புடனான தியாகத்துடன் செயற்பட வேண்டும் எனக் கூறினார்.(05)

# பாடசாலைகளுக்கு நிதிவுதவி வழங்கல்





(பி.கேதீஸ்)

சங்கராஜி நினைவு அறக்கட்டளையின் ஊடாக திருகோணமலைகூனித்தீவுநாவலர் வித்தியாலயம், சம்பூர்மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைண மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கும்நிதிவுதவிவழங்கப் பட்டன.இதன்போதுசங்கராஜி நினைவுஅறக்கட்டளையின் தலைவர் நேசன் சங்கராஜி, அதன் செயலாளர் ஏ.கமலா நந்தன், அதன் மத்திய மாகாண இணைப்பாளர் ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (05)

# சந்நிதி முருகன் தேர் நேற்று












வரலாற்றுசிறப்புமிக்கதொண்டைமனாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த திருவிழாவின் தேர்த்திருவிழா இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

தேர்த் திருவிழாவில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

இன்று திங்கட்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் - மாலை 6 மணிக்கு மௌனத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.08.2024இல் வெளியிடப்பெற்றது